Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.418/2024

2026-ம் ஆண்டு **மே** மாதம் **21-ம் தேதி வியாழன்கிழமை** குற்றம் முறையிடுபவரின் எ.சா. 1-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. பாலமுருகன், இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.சா. | - | 1 | தொழில் | - | சிவில் இன்ஜினியர் |
| பெயர். | - | செல்வம் (எ) மனோஜ்குமார் | வட்டம் | - | சென்னை |
| த/பெ. | | கே.ஆர்.செல்லப்பன் | சமயம் | - | - |
| ஊர் | - | சென்னை | வயது | - | 39 |

21.05.2026

புகார்தாரர் ஆஜரில்லை.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகார்தாரரை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 2018 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து தெரியும். நான் அமேசான் நிறுவனத்தில் டீம் லீடராக இருந்ததற்கு அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் உள்ளது. நான் அமேசான் நிறுவனத்தில் டீம் லீடராக இல்லை என்றாலும், நான் இடைத்தரகராக அங்கு செயல்பட்டேன் என்றாலும், அதனால் புகார்தாரர் என்னிடம் டாடா ஏசி வாகனத்தை ஒப்படைத்தார் என்றால் இல்லை.

2. புகார்தாரர் அவருடைய சார்பாக வேறு வேறு நபர்களின் வண்டியை என்னிடம் கொடுத்து வாடகை விட்டார் என்றால் இல்லை. அந்த காலக்கட்டத்தில் எனது பையனுக்கு உடல்நிலை சரியில்லை என்று அரசூருக்கு வந்து தொகை வாங்கினேன் என்றால் இல்லை. காசோலை தொலைந்ததது தொடர்பாக எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 21.06.2019 அன்று புகார் கொடுத்தேன்.

3. அந்த புகாரின் நகலை நான் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் புகார் கொடுப்பதற்கு முன்பாக 20.03.2019 அன்று நான் அவருக்கு காசோலை எழுதிக்கொடுத்ததாக புகார்தாரர் வழக்கில் சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். நான் காசோலையை எழுதிக்கொடுத்துவிட்டு அதனை மறைக்கும் நோக்கில் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை.

4. நான் புகார் கொடுப்பதற்கு முன்பு காசோலையானது எவ்வளவு நாட்களுக்கு முன்பு காணாமல் போனது என்றால் நான் வங்கியில் புகார் கொடுப்பதற்கு முதல்நாள்தான் எனக்கு

காசோலை காணாமல் போனது தெரியவந்தது. நான் சொல்வது தவறு என்றாலும், புகார்தாரர் பலமுறை என்னிடம் நேரிலும், போனிலும் பணம் கேட்டு நான் கொடுக்காததால் அவர் வழக்கு போடப்போவதாக என்னிடம் சொன்னதால் நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை.

5. பொதுவாக அவரவர் காசோலையில் அவரவர்தான் கையெழுத்துப்போட்டுக்கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். Axis Bank A/c. No. 9180 10098580430 யாருடைய வங்கிக் கணக்கு என்றால் என்னுடையதுதான். இது என்னுடைய வங்கி கணக்கு இல்லை என்றும், என்னுடைய மனைவி கணக்கில் உள்ள வங்கி கணக்கிற்கு நான் ரூ.44,000/- தொகை நிரப்பி அதில் கையெழுத்துப்போட்டு கொடுத்துள்ளேன் என்றால் நான் கையெழுத்துப்போட்டு கொடுக்கவில்லை.

6. Axis Bank A/c. No. 9180 10098580430 எண் கொண்ட காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் ஆமாம். அந்த வங்கி கணக்கு என்னுடையது அல்ல என்னுடைய மனைவியுடையது என்றால் எனக்கு சரியாக தெரியாது. நான் அமேசான் நிறுவனத்தில் டீம் லீடராக பணிபுரியவில்லை என்றும் , நான் புகார்தாரருக்கு பணம் கொடுத்ததாக சொல்வதும் வங்கி கணக்கில் பணம் போட்டதாக சொல்வதும் அவருக்கு கொடுக்கவேண்டி வாடகை பணம்தான் என்றால் அவர் வண்டிக்கான பணம்தான் சம்பளம்தான் போட்டேன். அதன் பிறகு அவருக்கு நிலுவை எதுவும் இல்லை. எனது மனைவி பெயர் நந்தினி என்றால் சரிதான்.

7. நந்தினி பெயரில் Axis Bank A/c. No. 9180 10098580430 உள்ளது என்றாலும் நான் புகார்தாரரை ஏமாற்றும் நோக்கில் அந்த வங்கி கணக்கு உள்ள காசோலையில் எனது கையெழுத்தை போட்டு புகார்தாரரை ஏமாற்றும் நோக்கில் கொடுத்தேன் என்றால் இல்லை. நான் அரசூருக்கு பலமுறை வந்துள்ளேன் என்றாலும், அவருடன் நட்பாக இருந்துள்ளேன் என்றும் அந்த நட்பின் அடிப்படையில்தான் எனது பையனுக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அவர் எனக்கு பணம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை.

8. நான் புகார்தாரரிடம் பணம் வாங்கியது உண்மை என்றாலும் அவருடைய பணத்தை திருப்பி கொடுக்க நான் கடமைப்பட்டவன் என்றால் இல்லை. நான் அமேசான் நிறுவனத்தின் டீம்லீடர் என்று சொல்லி டாடா ஏசிக்கு வென்டார் பணம் கட்டவேண்டும், டீசல் முன் அட்வான்ஸ் போடவேண்டும் என்று சொல்லி அவரது வங்கி கணக்கின் மூலமும், நேரிலும் எனக்கு பணம் அனுப்பியுள்ளார் என்றும் அந்த பணத்தை நான் திருப்பி தரவில்லை என்றால் இல்லை.

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

**(Sd./-R.Senthilkumar)**
**D.M-cum-JM,**
**T.V.Nallur.**